www.StudyGuideIndia.com

Jun. 2011

**7701**

Register Number

## பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் *நான்கனுக்கு* மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. தமிழரசி குறவஞ்சியில் பாட்டுடைத் தலைவனும் தலைவியும் யாவர் ?

2. பயனில்லாத முதுமையுடையாரிடம் நரிவெரூஉத்தலையார் வேண்டுவன யாவை ?

3. வினைத்திட்பம் என்பது யாது ?

4. அன்னம் வேலனைப் பற்றி வினாவியது யாது ?

5. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

6. சுந்தரர் தம்பிரான் தோழர் என்றழைக்கப்படக் காரணம் யாது ?

[ Turn over

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : $3 \times 4 = 12$

7. கம்பர் 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவற்றை நற்றிணை இலக்கியத்தின் வாயிலாக விளக்குக.

9. ஒறுத்தார், பொறுத்தார் குறித்துக் குறள் கூறுவன யாவை ?

10. சிலப்பதிகாரத்தில் வரும் 'ஈதொன்று' என்ற சொல்லின் பொருள்களைக் கூறுக.

11. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக: $3 \times 4 = 12$

12. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும். வேண்டாததும் யாவை ?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத்தக்கனவாக உமறுப்புலவர் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. $1 \times 8 = 8$

17. 'செய்ந் நன்றியறிதல்' பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும் தாவீதன் அவனை வென்ற திறத்தினையும் விளக்கி எழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து எழுதுக.

www.StudyGuideIndia.com

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''வெஞ்சின விறல்வேற் காளையொ

டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே''

அ) இச்செய்யுட் பகுதி இடம் பெற்றுள்ள நூல் எது ?

ஆ) இச்செய்யுளின் ஆசிரியர் யார் ?

இ) இவ்வடிகள் யார் கூற்றாக அமைந்துள்ளது ?

ஈ) 'அஞ்சிலோதியை' என்ற சொல் யாரைக் குறிக்கும் ?

*அல்லது*

21. ''மண்குளிரச் செய்யும் மறவேல், நெடுந்தகை

தண்குடை வெம்மை விளைத்தது''

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?

ஆ) இதனை இயற்றிய ஆசிரியர் யார் ?

இ) இதனைக் கூறியவர் யார் ?

ஈ) தண் குடை - யாருடையது ?

VI. 22. ''கண்டனென்'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. ''தினைத்துணை'' எனத் தொடங்கும் திருக்குறளையும் ''நோய்'' என முடியும் திருக்குறளையும் அடிபிறழாது எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) திறந்து ஆ) வந்தனன் இ) செய்க

ஈ) நோக்கிய உ) ஏகுவாய் ஊ) பொறுத்தல்.

[ Turn over

www.StudyGuideIndia.com

25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) வாழிய வாழிய ஆ) பெருங்களிறு

இ) வேலியாற் கதுவிடா ஈ) அறண்

உ) பேரோடும் புகழோடும் ஊ) கண்ணீர் வெள்ளம்.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) கடுந்திறல் ஆ) குருகுமுண்டு இ) நிறையுடைமை

ஈ) பூங்கொடியாள் உ) மழைக்கண்ணீர் ஊ) செருக்கெழ.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

முல்லைத்திணை ***அல்லது*** பொருண்மொழிக் காஞ்சித்துறை

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி 1 × 4 = 4

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

தற்குறிப்பேற்ற அணி ***அல்லது*** உருவக அணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| | திணை | | நிலம் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | — | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| 30. | முல்லை | — | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| 31. | மருதம் | — | சுரமும் சுரம் சார்ந்த இடமும் |
| 32. | நெய்தல் | — | மலையும் மலை சார்ந்த இடமும் |
| | | — | காடும் காடு சார்ந்த இடமும். |

www.StudyGuideIndia.com

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. 'ஒன்றே யென்னின்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம்

அ) அயோத்தியா காண்டம்

ஆ) சுந்தர காண்டம்

இ) யுத்த காண்டம்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 75.

35. குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர்

அ) பெருந்தேவனார்

ஆ) வரந்தருவார்

இ) கபிலர்.

36. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) கவிமணி

இ) பாரதியார்.

37. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள்

அ) மூன்று

ஆ) ஆறு

இ) முப்பது.

[ Turn over

www.StudyGuideIndia.com

38. வரி என்பது ................... வகையது.

அ) சந்தப்பாடல்

ஆ) இசைப்பாடல்

இ) கலிப்பாடல்.

39. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுபவர்

அ) அனுமன்

ஆ) இராவணன்

இ) இலக்குவன்.

40. 'தனயை' என்ற சொல்லின் பொருள்

அ) அம்மா

ஆ) உடன்பிறந்தாள்

இ) மகள்.

41. 'நீலகேசி' என்னும் நூலின் ஆசிரியர்

அ) சீத்தலைச் சாத்தனார்

ஆ) பெயர் தெரியவில்லை

இ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

42. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்

அ) மதுரைக் கலம்பகம்

ஆ) நந்திக் கலம்பகம்

இ) காசிக் கலம்பகம்.

www.StudyGuideIndia.com

43. முக்கூடற் பள்ளுக்குரிய பாவகை

அ) சிந்துப்பா

ஆ) ஆசிரியப்பா

இ) வஞ்சிப்பா.

44. பாரதிதாசன் வெளியிட்ட இதழ்

அ) தேன்மழை

ஆ) குயில்

இ) தென்றல்.

45. ''சேரதாண்டவம்' என்னும் நூலின் ஆசிரியர்

அ) வாணிதாசன்

ஆ) சுப்புரத்தினதாசன்

இ) பாரதிதாசன்.

46. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

47. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசன்

இ) நாமக்கல் கவிஞர்.



www.StudyGuideIndia.com

48. சுரதாவின் நூல்களுள் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்ற நூல்

அ) தேன்மழை

ஆ) துறைமுகம்

இ) சுவரும் சுண்ணாம்பும்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 × 2 = 4

49 எழுமை ................ உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் ................ .

50. சென்ற இடத்தாற் ................ தீதொரீஇ

நன்றின்பால் ................ தறிவு.

www.StudyGuideIndia.com